RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s21

# சிவன் வழிபாடும் இறைநெறிக் கொள்கை வளர்ந்த விதமும்

## ஆ. மரிய தனபால் [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620002, தமிழ்நாடு, இந்தியா.

# Worship of Lord Shiva and the development of Religious Principles

## A. Maria Dhanabal [a, *]

[a] Tamil Department, St.Joseph's College (Autonomous), Tiruchirappalli-620002, Tamil Nadu, India

* Corresponding Author: dhanabalsjc@gmail.com

Received: 04-01-2021
Revised: 11-04-2021
Accepted: 13-04-2021
Published: 30-04-2021

Check for updates

**ABSTRACT**

Down the century's humans embraced nature for living and worshiped nature as God. Humans were one with nature for their happiness. He thanked nature for all goodness received from it. He worshipped nature as God to ward off evil spirits. Worshiping nature is antiquity. Religious factors are found uniquely and comprehensively in the primitive literature. But, the word (Samayam) religion is not found anywhere in olden literature. Moreover, the names Saivam and Vainavam are also not found in them. Despite, this article explores how the worship of Lord Shiva came to existence and the religio-morals in Tamilnadu.

**Keywords:** Samayam, Saivam, Vainavam, Worship.

## முன்னுரை

பன்னெடுங்காலந்தொட்டு மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்து இன்புற்று இருந்தான். இயற்கையால் கிடைத்த நம்மைகளுக்கு நன்றி கூறவும், தீமைகள் வராமல் காக்கவும் அவ்இயற்கையை வழிபடலானான். இயற்கை வழிபாடே உலகின் தொன்மையான வழிபாடாகும். சங்க இலக்கியங்களில் சமயக்கூறுகள் தெளிவாகக் காணப்படுகின்றன. ஆனால், சமயம் என்ற சொல் இடம்பெறவில்லை. சைவம், வைணவம் என்ற பெயர்களும் இல்லை. எனினும் சிவன் வழிபாடும் இறைநெறிக் கொள்கைகளும் தமிழகத்தில் காலூன்றிய விதம் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## தொல்காப்பியரின் நானிலப் பாகுபாடுகள்

தொல்காப்பியர் முழுமுதற்கடவுளாகச் சிவபெருமானைக் குறிப்பிடவில்லை. மக்கள் வாழ்வில் நடைமுறையில் நாள்தோறும் பயன்படும் கருப்பொருள்களில் ஒன்றாகத் தெய்வத்தைக் குறிப்பிடுவர். நான்கு நிலங்களிலும் சிவனுக்கு முக்கியத்துவம் வழங்கப் பெறவில்லையென்பதை,

"மாயோன் மேயகாடுறை உலகமும்

சேயோன் மேயமைவரை உலகமும்

வந்தன் மேயதீம்புனல் உலகமும்

வருணன் மேயபெருமணல் உலகமும்

என்ற நூற்பாவின் வாயிலாக அறியமுடிகிறது (Subramaniyan, 2013). கண்ணன் விரும்புகின்ற காடுடைய முல்லை நிலமும், முருகன் விரும்புகின்ற மேகம் சூழ்ந்த மலையுடைய குறிஞ்சி நிலமும்,

இந்திரன் விரும்புகின்ற மிகுதியான நீரையுடைய மருதநிலமும், வருணன் விரும்புகின்ற மிகுதியான மணலையுடைய நெய்தல் நிலமுமென முறையாகச் சொல்லப்படும் நிலப்பாகுபாடாகும்.

## பாரதம் பாடிய பெருந்தேவனார்

தொல்காப்பியரின் கருத்துக்கு மாறுபட்டக் கருத்தைக் கூறியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் எனக்கருத இடமுண்டு. இவர் எட்டுத்தொகையில் செம்பாதியாகிய அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து ஆகிய நான்கு நூல்களில் சிவனை முழுமுதற்கடவுளாகக் கொண்டு வாழ்த்துப்பாடி முகப்பில் சேர்த்துவிட்டார். தொல்காப்பியர் கூறிய வேந்தனையும், வருணனையும் பாடவோ வாழ்த்தவோ புலவர் மறந்தனர். இருபெருதெய்வங்களின் வாழ்வு இத்துடன் முடிவுற்றது. இச்சூழலில் பெருந்தேவனாரின் தமிழ்ப்பாக்களால் சிவன் பெருவாழ்வு பெற்றுவிட்டார். தமிழோடு தொடர்பற்ற எக்கடவுளும் இங்கு நிலைபெற இயலாதென்பதை உணர்ந்த புலவோர் தமிழையும் சிவனையும் கலந்து மொழிக்கு ஒரு தெய்வத்தன்மை கொடுத்தனர்.

## வழிபடும் கடவுள் உயிர்களைக் காத்தல்

கடவுளை வழிபடுதல் மக்களின் கடமைகளுள் முன்னிற்பது. வழிபடு கடவுள் உயிர்களுக்குத் தோன்றாத் துணையாக இருந்து காக்கும். தொல்காப்பியர் கடவுளின் அருளால் அறத்தின் வழிவந்த செல்வத்தோடு தழைத்து வாழ்கவென வாழ்த்துகிறாரென்பதை,

“வழிபடுதெய்வம் நிற்புறங் காப்பப்

பழிதீர் செல்வமொடுவழிவழிசிறந்து

பொலிமின்”

இந்நூற்பாவின் வாயிலாக அறிய முடிகிறது.

## வழிபாட்டு முறைகள்

சிவன் கோயில்களில் தென்முக நம்பியாகிய தட்சிணாமூர்த்தியாகவும் மாதொரு பாகனாகிய தில்லைக் கூத்தனாகவும் வழிபடுவது தென்னாட்டு வழிபாட்டு முறையென்றும், கல் அல்லது மரத்தினால் செய்த சிவலிங்கமாக வழிபடுவது வடநாட்டு வழக்கமென்றும் கருதப்படுகிறது. வடநாட்டில் சிவனை இலிங்க வடிவில் வழிபட்டதற்கான சான்றுகள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. சிந்துவெளி நாகரிக அகழ்வாராய்ச்சில் நடராசன் ஆடல் வடிவம் கிடைத்திருப்பினும் சிவலிங்கங்கள் மிகஅதிகமாகக் காணப்படுகின்றன. இதனை உறுதிசெய்யும் விதமாக,

“கலிகெழு கடவுள் கந்தம் கைவிடப்

பலிகண் மாறிய பாழ்படு பொதியில்

என்று புறநானூற்றுப் பாடலாசிரியர் மருதன் இளநாகனார் சான்று பகருகின்றார் (Manikavasagan, 2007). நிழல்தரும் மரங்களின் அருகில் கந்து (தூண்) அல்லது இலிங்கம் ஆகியவற்றை வைத்து வழிபடும் வழக்கம் உருவானதைக் காணமுடிகிறது. ஆகையால், மரத்திற்கும் கல்லிற்கும் வழிபாட்டு முறைக்கும் நீண்ட தொடர்புண்டு என்பதை அறிய முடிகிறது. பழங்காலத்தில் கோயில்கள் கட்டிய போது மரங்களை நடுவில் அமைத்துக் கட்டினர். அம்மரங்கள் பின்பு தலவிருட்சங்களாக மாறின. கிராமங்களில் அரசமரம், பனைமரம் ஆகியவற்றைச் சிவனாகக் கருதி வழிபடும் வழக்கத்தை,

“தொன்று உறைகடவுள் சேர்ந்த பராரை

மன்றப் பெண்ணை”

“நெடுவீழ் இட்டகடவுள் ஆலத்து”

“ஆலமர் செல்வன்”

“முக்கண் செல்வன் ஆலமுற்றம்”

“ஆல்கெழு கடவுள்” என்றெல்லாம் சங்க இலக்கியப் பாடல் வரிகளின் வாயிலாக அறிய முடிகின்றன (Balasubramaniyan, 2004; Viswanathan, 2004; Jayapal, 2004; Mohan. 2004).

## கல்வழிபாட்டு முறை

நாகரிகம் நன்கு வளராத காலத்திலேயே தெய்வத்தின் அடையாளமாக ஒரு சிறுகல்லை நட்டு வழிபடும் முறை நிலவியது. மரத்தூண் அல்லது குறுந்தடியை நட்டு வழிபடுவது தாணு வழிபாடு எனப்பட்டது. சிறுகல்லுக்கு இலிங்கம் என்னும் பெயர் வடநாட்டில்தான் முதன்முதலில் வழங்கப்பெற்றது. கற்கால மனிதரின் கல்லாயுதங்களே கல்லறை மீது வைக்கப்பட்ட இறந்தோர் நடுகல் வழிபாடாகத் தொடங்கியது எனலாம். இலிங்கம் என்பதற்குச் சிவலிங்கம் அடையாளக்குறி, ஆண்பால் உறுப்பு என்றெல்லாம் கூறப்படும் பொருள்கள் காலத்தால் பிற்பட்டதாகும். இச்சொல்லின் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழஞ்சொல் வடிவங்கள் வடதிராவிட மொழிகளுள் ஒன்றாகிய குரூக் மொழியிலும், நேப்பாளம் மற்றும் ஆஸ்திரேலியப் பழங்குடி மொழிகளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## இலிங்கம் என்பதன் பொருள்

வடதிராவிட குரூக் மொழியில் வல், வல என்னும் சொற்கள் கல்லைக் குறிக்கின்றன. “சிறுகல்லுக்கு வலங்கம் (வல்ூஅங்கம்) (அங்கு-அக்குஸ்ரீசிறுதுண்டு) என்பது மிகவும் தொன்மையான பெயர். இந்தச்சொல் ஆஸ்திரேலியப் பழங்குடியினர் வலக்கம் - லங்கம் - லிங்கம் எனத்திரிந்து வழங்குகிறது” என்று இரா. மதிவாணன் குறிப்பிடுவர். நேப்பாளக் கிளைமொழிகள் அனைத்திலும் சிறுகல்லைக் குறித்த தொன்மையான தமிழ்ச்சொல் வலங்கம் என்பது லங், லுங், லோங், ஒங்க, லுங்கோ, லுங்கக் எனத்திரிந்துள்ளதை மொழியியல் அறிஞர்கள் எடுத்துரைத்த கருத்துக்களின் வாயிலாக இலிங்கம் என்ற சொல் குறித்து தவறானக் கருத்தாடல்களைப் புரிந்தகொள்ள ஏதுவாக அமைகிறது.

## தேவநேயப் பாவாணர் கருத்து

சொல்லின் வேர்ச்சொல் ஆராய்ச்சி ஒருசொல் தோன்றி காலம், இடம், பரவிய நாடுகள் ஆகிய அனைத்தையும் காட்டுமென பாவாணர் வரையறுத்துள்ளார். இலிங்கம் என்றசொல் புதிய கற்காலத்தில் தோன்றிய சொல் என்பதும் அப்போது எங்கெங்கு மக்கள் பரவினார்களோ அங்கெல்லாம் இச்சொல் பரவியுள்ளதெனத் தெரிகிறது. தமிழர் கற்கால நாகரிகத்திலிருந்து வேளாண்மை நாகரிகத்திற்கு வளர்ந்த போது இச்சொல்லாட்சி தமிழில் வழக்கு வீழ்ந்து போயிருக்கலாம். ஆயினும், தமிழ் மருத்துவமாகிய சித்தமருத்துவர்களிடம் இச்சொல் மறையாமல் வழங்கி வருகிறது. மருத்துவத்திற்குப் பயன்படும் கல்லிருந்து செய்த நுண்பொடி, பாடாணம், மெழுகு ஆகியவை முறையே லிங்கபஸ்பம், லிங்கபாஷாணம், லிங்கமெழுகு என இன்றளவும் வழங்கி வருகிறார்கள்.

## இலிங்க வழிபாட்டிற்கு இழிவு கற்பித்த விதம்

இயற்கையில் கடவுளைக் கண்ட கற்கால மனிதர்கள் குறியீட்டின் வடிவில் கடவுளைக் காணமுற்பட்டதன் விளைவே இலிங்க வழிபாடாகும். நாளடைவில் அங்கங்கு சிறுகல் நடுவது அடையாளமாகக் கருதப்பட்டதால் அடையாளம் என்னும் பொருளால் பெருகி வளரத் தொடங்கியது. தெய்வ வழிபாடுகள் நட்டகல்லை வழிபடுவதாக மாறின. விலங்குகள் குட்டிபோட்டதும் ஆண்குட்டியோ அல்லது பெண்குட்டியோ எனஅறிவதற்கு இச்சொல் பயன்பட்டதால் கல்லாத மக்களிடையில் இலிங்கம் என்பது ஆண்குறியைக் குறித்த சொல்லாயிற்று. அன்று முதல் வடநாட்டில் இச்சொல்லிற்கு ஆண்குறி

என்னும் பொருள் சுமத்தப்பட்டுச் சிவ வழிபாட்டாளருக்கு இழிவு கற்பிக்கும் சொல்லாகிவிட்டது. இலிங்கம் என்னும் வெறும் கல்லைக் குறித்த சொல் தெய்வ அடையாளக் குறியீடாக மாறிய உண்மை வரலாற்றை வெளிப்படுத்தாத காரணத்தால் இலிங்க வழிபாட்டை இழித்துரைக்க இடந்தந்துவிட்டது. கல்லைக் கழுவுவதற்கு அடிப்பீடம் அமைப்பது இயற்கையான ஏற்பாடு என்பதைக்கூட அறியாமல் ஆண் பெண் புணர்ச்சிக் குறியீடாகக் காட்டியது மேலும் தாழ்த்திப் பேசுவதற்கு இடந்தந்துவிட்டது.

## சிவன் - சொற்பொருள் விளக்கம்

சைவர்களின் முழுமுதற்கடவுளாகக் கருதப்பெறும் சிவன் என்றபெயர் சங்க இலக்கியங்களில் எங்கும் குறிப்பிடவில்லை. ஆனால், பிறபெயர்களால் சிவபெருமான் குறிக்கப்பட்டுள்ளார். சிவன் என்றசொல் சிறப்பு என்பதிலிருந்து பிறந்தது. இச்சொல் மங்களம், சுகம், பாக்கியம், பேரானந்தம், சாந்தி, அமைதி, நேர்மை, நன்மை ஆகிய பொருள்களைத் தருகிறது. இவைவிடுத்து சிவன் என்ற சொல்லிற்கு செம்மை என்ற பொருளும் உண்டு. நானிலத்திற்குரிய கடவுளாகத் திருமால், முருகன், வேந்தன், வருணன் ஆகிய தெய்வங்களைத் தொல்காப்பியம் கூறுகின்றது. இதில் சேயோன் என்பதற்கு சிவப்பு, செம்மை என்ற பொருள், சிவன் சிவப்பானவர் என்பதை சூரியனுக்கும் செண்பக மலருக்கும் உவமையாக,

"அந்தி வானமொடு கடல் அணிகொளாஅ

வந்த மாலை பெயரியன்"

"அரும்பெறல் ஆதிரையான் அணிபெற மலர்ந்த

பெருந்தண் சண்பகம் போல"

என்று அகநானூறு மற்றும் கலித்தொகைப் பாடல் வரிகள் இயம்புகின்றன (Jayapal, 2004; Viswanathan, 2004).

## சிந்துவெளி நாகரிகத்தில் சிவன்

மிகப்பழைமையான நாகரிகமாகக் கருதப்படுவது சிந்துவெளி நாகரிமாகும். இந்நாகரிகத்தில் சிவனது வாகனமான எருது, இலிங்கம் பற்றிய குறிப்புகள் உள்ளன. "சிந்துவெளி பகுதியில் கிடைத்துள்ள முத்திரைகளில் எனான் என்றசொல் காணப்படுகின்றது. இச்சொல் எண்குணத்தான் ஆகிய சிவபெருமானைக் குறிப்பதாகும்" என்று ஈராஸ் பாதிரியார் குறிப்பிடுவர் (Selvakumar, 2003). இக்கருத்திற்கிணங்க சிவனின் எண் குணங்களைப் பழந்தமிழ் இலக்கியங்களில் மறைபொருளாக வைத்தும், வெளிப்படையாக வைத்தும் சிவனது நற்கூறுகளைப் புலவர் எடுத்தியம்பி உள்ளனர். சிவனின் எண் குணங்களாவன, தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்கள் இல்லாமை, பேரருள் உடைமை, வரம்பில் ஆற்றல் உடைமை, தன்னிகர் இல்லாமை என்பனவாகும். இவைமட்டுமே சிவபெருமானின் உண்மையான குணங்களாகும். இவ்வெண்குணங்களை எடுத்துரைப்பதாகச் சிவன் பற்றி சங்கப்பாடல்கள் அமைகிறது.

## முடிவுரை

சிவன் குறித்த செவ்வியல் இலக்கண, இலக்கியப் பதிவுகள், சைவ சமய இறைநெறிகள், சிவனோடு தொடர்புடைய கதையாடல்கள், இலிங்கம் மற்றும் மரவழிபாட்டின் சிறப்புகள், சிந்து சமவெளி நாகரிகத்தில் சிவன் குறித்த தொல்லியல் எச்சங்கள் போன்றவற்றின் வாயிலாகக் கிடைத்த அடிப்படையான தகவல்களைக் கொண்டு கற்காலம் முதல் தற்கால வரை சிவன் வழிபாடு எப்படியெல்லாம் வளர்ச்சியடைந்தது என்பதை அறியவும், தொல்காப்பியர் குறிப்பிட்ட இறைநெறிச் சிந்தனைகளின் அடிப்படையிலும் சிவன் வழிபாடு குறித்த செய்திகளை ஊகிக்கவும் இக்கட்டுரை துணைசெய்கிறது.

## References

Balasubramaniyan, K.V., (2004) Natrinai, New Century Book House Pvt Ltd., Chennai, India.

Jeyapal, R., (2004) Agananooru, New Century Book House Pvt Ltd., Chennai, India.

Manikavasagan, G., (2007) Purananooru Moolamum Uraiyum, Uma Pathippagam, Chennai, India.

Mohan, R., (2004) Thirumurugatrupadai, New Century Book House Pvt Ltd., Chennai, India.

Selvakumar, C., (2003) Tamil Sevvilakiya Marabiyal Samayam, Andril Pathippagam, Chennai, India

Subramaniyan, S.V., (2013) Tholkappiyam Clarification, Manicasagar Pathippagam, Chennai, India

Viswanathan, (2004), Kalithogai, New Century Book House Pvt Ltd., Chennai, India.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License